**Chenkaantal**
*A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal*

**Volume - 2, Special Issue - 1, November 2022** **E-ISSN: 2583-0481**

# Psychological Thoughts in the field of Sowmiya Thurai

**L. Joan Sylvia Prema,** Part time Research Scholar, Assistant Professor of Tamil,
ST. Anne`s Art & Science College, Madavaram, Chennai-110.
**ORCiD: https://orcid.org/0000-0003-1662-5294**
**DOI: 10.5281/zenodo.7313234**

## Abstract

*It is natural for the people living in the world to pray to God, whom they worship and pray for blessings to end their sufferings and live a good life. Theology is singing from the standpoint of God alone. Secularism refers to the sufferings of the world and sings of the Lord who removes all of them and gives them well-being. Such mind-based thoughts can be seen here and expressed very deeply through the songs of sowmiyat thurai Thittur Thecikar.*

**Keywords:** Soul, Faith, Contentment, Abode, Pure life

## References

[1] *Chiristava Tamil Ilakiya valam*, Dr. Gnana chandra Jhonson. Mullai Publisher 2009.
[2] *Iraivan Nammil Naam Avaril*, Dr.M.Vivin Rodricks. Vaigarai Publisher.
[3] *Perithum Arimugamillatha chisthava tamil Ilakiyam*. Dr. Yesudas. Rainbow Publisher.
[4] *Psychological Spirituality*, Dr. J. Maria Anthony. Nam Vaazvu publisher 2009.
[5] *Sowmiyat Thurai*,Dr. S. Innasi. University of Madras, 1986.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

செங்காந்தள்
அறிஞர்களால் மதிப்பீடு செய்யப்படும் தமிழ் ஆய்விதழ்



மலர் - 2, சிறப்பிதழ் - 1, ஐப்பசி 2053 இ - ஐ எஸ் எஸ் எண்: 2583-0481

# சௌமியத் துறையில் உளவியல் சிந்தனைகள்

**லூர். ஜோன் சில்வியா பிரேமா**, பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
புனித அன்னாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி, மாதவரம், சென்னை - 110.
**ORCiD: https://orcid.org/0000-0003-1662-5294**
**DOI: 10.5281/zenodo.7313234**

**ஆய்வுச்சுருக்கம்**

*உலகில் வாழும் மக்கள் தாம் வணங்கி வழிபடும் இறைவனிடம் நல்லருள் வேண்டுவதும். தங்கள் துன்பங்கள் தீர்ந்து நல்வாழ்க்கை வாழ வரம் வேண்டுவதும் இயல்பானஒன்றாகும். இறையியல் என்பது இறைவனின் நிலையில் இருந்து அவனை மட்டும் பாடுவதாகும்.உலகியல் என்பது உலகிலுள்ள துன்பங்களை கூறி அவற்றையெல்லாம் களைந்து நல்வாழ்வு தருபவன் இறைவன் என்னும் நிலையினைப் பாடுவதாகும் அத்தகைய மனம் சார்ந்த சிந்தனைகளை இங்கு திட்டூர் தேசிகரின் சௌமியத் துறையில் பாடல்களின் மூலம் மிக ஆழமாக வெளியிடுவதை காணலாம்.*

**திறவுச்சொற்கள்:** ஆன்மா, விசுவாச ஊஞ்சல், நம்பிக்கை, பற்றுருதி, உறைவிடம், தூயவாழ்வு.

**முன்னுரை**

கருணை உள்ளம் கடவுளின் இல்லம் இறைவனுக்கொரு உருவம் தர நினைத்தால் அது கருணையால் மட்டுமே முடியும் என்று கூறலாம். கருணையின் மறு வடிவங்கள் தான் இரக்கம், ஈகை என்பனவெல்லாம் இவை அனைத்திற்கும் ஒட்டுமொத்த உறைவிடமே அன்பு அன்பிருக்கும் நெஞ்சம் ஆண்டவன் வாழும் இல்லம் ஆகும். அன்பின் நாதம் ஆன்மாவின் கீதம் அதுதான் ஆன்மீக வேதம். ஆன்மீகச் சிந்தனை மிக்கோர் செய்யும் ஒவ்வொரு செயலிலும் பொருளிருக்கும் புத்துணர்வு இருக்கும். அத்தகைய இறையுணர்வில் தங்களை முழுமையாக ஈடுபடுத்தி கொள்ளுவார்கள். அத்தகைய உள்ளம் சார்ந்த சிந்தனைகளே இங்கு மனதில் எழும் பக்தியுணர்வினை சௌமியத் துறையில் உளவியல் கருத்துக்களை காணலாம்.

**பிறப்பும் கல்வியும்**

திட்டூர் தேசிகர் என்ற ஈசுவர வடிவு, குமரி மாவட்ட திட்டுவிளை கிராமத்தில் இராமன் என்ற சைவ குருக்களுக்கும் அந்தர எசக்கிக்கும் மகனாக கி.பி.1858ஆம் ஆண்டு பிறந்தார். ஈசுவர வடிவு கைக்குழந்தையாக இருந்தபோது தந்தை இராமன் இறந்தார். 1863ஆம் ஆண்டு திண்ணைப் பள்ளியில் கல்வி கற்கத் தொடங்கிய இவருக்கு ஐரோப்பிய மறைத் தொண்டர்களின் உதவி கிட்டியது. நன்கு கற்றுத் தேர்ந்து பதினைந்தாம் வயதில் ஆசிரியப் பணியினை மேற்கொண்டார்.

**தேசிகரின் கிறித்துவ சமய பற்று**

நாகர்கோவிலில் சி.எஸ்.ஐ. கிறித்தவ ஆலயத்தில் 1871ஆம் ஆண்டு நடைப்பெற்ற மாவட்ட சங்கக் கூடுகையில் நாட்டங்கொண்டு நடைப்பயணம் மேற்கொண்டார். புத்தகங்கள் விற்கும் இடத்திற்குச் சென்று தனக்காக செந்தமாக ஒரு சிறிய புத்தகத்தை வாங்கினார், அதிலுள்ள கருத்துக்களை அவரால் புரிந்து கொள்ள முடியவில்லை. அருகிலுள்ள ஆலயத்தின் போதகராயிருந்த அருள் திரு. சி. ஏசுவடியான் (பெரிய நாட்டையர்) அவருடைய உதவியை நாடினார். அவர் உதவியதுடன் கடவுள் மீது அதிக நம்பிக்கை விசுவாசம் வைத்தால் அந்த புத்தகத்திலுள்ள கருத்துக்களை அறிந்து கொள்ள முடியும் வழிக்காட்டுதலைப் பெற்றார். போதகரிடமிருந்து தொடர்ந்து பல அறிவுரைகளைப் பெற்று கிறித்தவ மதத்தைத் தழுவினார். ஈசுவர வடிவு- ஈசுவர பாக்கிய ஈசாக்கு என்றும், அவருடைய தாயார் அந்தர எசக்கி – ஜீவரத்தினம் அம்மாள் என்றும், அழைக்கப்பட்டார். ஈசுவர வடிவை ஈசுவர பாக்கிய ஈசாக்கு என மாற்றிய சிறிய புத்தகம் புனித லூக்கா எழுதிய நற்செய்தியாகும். தன்னை ஆட்கொண்ட இனிய அனுபவத்தை இரட்சணிய காட்சி என்னும் நூலில் பாடலாக புனைந்துள்ளார்.

**இறுதி வாழ்வு**

1932ஆம் வருடம் மே மாதம் 14ஆம் நான் தனது எழுபத்து நான்காம் வயதில் மறைந்தார். அறுபது ஆண்டுகள் இறைப் பணியாற்றிய இவர் இறுதியாக இறைப் பணியாற்றிய இடம் களியங்காடு திருச்சபையாகும். அவரது உடல் திட்டுவிளை சி.எஸ்.ஐ.கல்லறைத் தோட்டத்தில் தன் மனைவி திருமதி ஜீவரத்தினம் அம்மாள் கல்லறையின் அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. அவரது கல்லறையில் எழுதப்பட்டுள்ள குறிப்பு பின்வருமாறு

**இயேசுவும் நானும் ஒன்று**

**அவர் ஆயன் நான் ஆடு. ரா.ஈ.**

**சௌமியத் துறை அறிமுகம்.**

திட்டூர் தேசிகரால் கி.பி.1894 ஆம் ஆண்டு முதல்1910 ஆம் ஆண்டு வரை சிறுகச் சிறுக இயற்றப்பட்டு பின்னர் ஒரு முழு நூலாக தொகுகப்பட்ட பேரிலக்கியமே சௌமியத்துறை. சௌமியம்-சாந்தம் துறை-வழி என்பது ஆகவே மனோசாந்தத்தையடைந்து கொள்ளும் வழியைக் கூறும் நூல் என்பதாகும். சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள் பரலோக இராஜ்ஜியம் அவர்களுடையது (மத் 5.5) உங்கள் சாந்தகுணம் எல்லா மனுஷருக்கும் தெரிந்து இருப்பதாக (பிலிப் 4.5) வேதாகமப்பகுதிகளைக் குறிப்பிட்டுள்ளார். அதாவது பரலோக வாழ்வினை அடைவதற்கான சிறந்த வழிகளாவன மனதில் அமைதி நிலவ வேண்டுமென்பதனை வலியுறுத்தி இந்நூலினை பாடியுள்ளார். அமைதித்துறை என்னும் பொருள்படும் இந்நூல் 105 தலைப்புகளை கொண்டது. 1902 பாடல்கள் இடம் பெற்றுள்ளன. இவ்வரிய நூலுக்கு பேராசிரியர். சூ.இன்னாசி அவரகள் சிறந்த விளக்கவுரை எழுதியுள்ளார்.

**தூய சிந்தனை**

ஆன்மா என்பது நல்லவைகளை அறிந்து அறிவிப்பதற்காகவே மனிதனுள் இருக்கின்றது அல்லாதவைகளை அகற்றிவிடத் தூண்டும் குணமுள்ளது நல்லவைகளின் மொத்த உருவே அது. ஒன்றே செய் அதை நன்றே செய் அதை இன்றே செய் என்ற கூற்றினும் உயிரோட்டம் தருவது இதுவே ஆன்மா எப்போதும் மனிதமனம் நல்லவற்றை மட்டுமே செய்யத் தூண்டும் தீயவை இழுக்கானவை தவறானவை போன்றவை ஆன்மாவின் பரம எதிரிகளாகும் என்கிறார் தேசிகர்,

**தப்புறு பழைய வேற்பாட்டின்**
**சதுர்ப்பிரி வசையாக காற்க ளாக்கி**
**ஒப்புறுபுதிய வேற்பாட்டின் முன்**
**…செப்புறு தேவ புகழ்துலங்கத்**
**திவிய சீவிய மூஞ்சலாடாய் (சௌ.து., பா.101.1)**

ஊஞ்சல் என்ற தலைப்பில் தம்முடைய கருத்துக்களை தெரிவித்துள்ளார். அதாவது பலகை ஒன்று அதற்குரிய நீள் கயிறு இரண்டு. இரு கயறுகளை நான்கு துளைகளில் புகுத்தி ஆக்கப்பட்டது ஊஞ்சல் ஆகும். அதாவது ஊசலில் ஏறி உட்கார்ந்தவுடன் கால்கள் தரையில் படாது. மண்தரையிலிருந்து விடுபடுகின்றன அதாவது தீய மானிட உறவை விட்ட நீங்கி தூய வாழ்வை வாழ்வதற்கான வழியை (இயேசு) "இறைவன்" என்னும் ஊஞ்சலைப் பற்றினால் தீமையிலிருந்து விடுபடலாம் என்கிறார்.

**விசுவாச விளக்கு**

**மெய்யான விசுவாச விளக்கெங்கு மேற்றுமேடோ**
**விழிப்போடு ஜெபம்புரிந்து மேனாக்கி நீல்லுமேடோ (சௌ.து., பா.17.3)**

இப்பாடலில் தேசிகர் குறிப்பிடுவது உண்மையான நம்பிக்கையோடு விளக்கு ஏற்றுங்கள், விழிப்போடு இறைவனை நோக்கி வேண்டுதல் செய்யுங்கள், பொய்யான வேட பக்தியை விடுத்து உண்மையான விசுவாசமுடன் இறைவனை அடையவேண்டும் என்கிறார். பாவத்தை தீர்க்க இறைவன் வருகின்றார் அவரை வரவேற்க விழிப்போடு இருக்குமாறு கூறுகிறார்.

**தாழ்மையில் பற்று உறுதி**

**ஒன்றான முப்பொருளு மொன்றானே களங்கமறும்**
**ஒன்றானே யண்டினருக்கொன்றானேமனந்திரும்பார் (சௌ.து., பா.21.10)**

நம்மை உண்டாக்கிய இறைவன் முன்பாக பணிந்து பக்தி என்னும் விசுவாச முழங்கால் படியிட்டு, இறைவனை மனதார வணங்கினால் தீமையினின்றுவிடுபடலாம் என்கிறார்.

**ஞான வழிகள்**

மனிதர்களாகிய நாம் உள்ளத்தை தூய்மையாக வைத்தால் இறைஞானத்தை அடையலாம் என்கிறார்.

**தேவ வாலயமாகிய தேகம்**

**செகத்துக்கும் பரத்துக்கும் பங்குள்ள தேகம்**
**திருவிறை ஞானம் விளங்கிய தேகம். (சௌ.து., பா.85.2)**

இறைவனை நம் மனதில் காண விசுவாசம் நம்பிக்கை தூய மனத்துடன் இருக்கவேண்டும் என்கிறார்.

**முடிவுரை**

ஆன்மா என்பது நல்லவைகளை அறிந்து அறிவிப்பதற்காகவே மனிதனுள் இருக்கின்றது, அல்லாதவைகளை அகற்றிவிடத் தூண்டும் குணமுள்ளது நல்லவைகளின் மொத்த உருவே அது. ஒன்றே செய் அதை நன்றே செய் அதை இன்றே செய் என்ற கூற்றினும் உயிரோட்டம் தருவது இதுவே ஆன்மா. எப்போதும் மனிதமனம் நல்லவற்றை மட்டுமே செய்யத் தூண்டும் தீயவை இழுக்கானவை தவறானவை போன்றவை ஆன்மாவின் பரம எதிரிகளாகும் என்கிறார் தேசிகர்,

**துணைநூற் பட்டியல்**

[1] Dr. சூ.இன்னாசி. *சௌமியத் துறை*, சென்னைப் பல்கலைக்கழகம்.
[2] Dr.ஜெ.மரிய அந்தோணி. *உளவியல் ஆன்மீகம்*, நம் வாழ்வு வெளியீடு 2009.
[3] Dr. த.இயேசுதாஸ். *பெரிதும் அறிமுகமில்லாத கிறித்தவ தமிழ் இலக்கியங்கள்* ரெயின்போ பதிப்பகம்.
[4] Dr.ம.விவின் ரோட்ரிக்ஸ். *இறைவன் நம்மில் நாம் அவரில்*, வைகறை பதிப்பகம் 2019.
[5] முனைவர் ஞான சந்திர ஜாண்சன். *கிறித்தவத் தமிழ் இலக்கிய வளம்*. முல்லை நிலையம், 2009.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.
**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.
**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.